| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2025 | |
| CC.No.136 /2023 | |
| சாட்சி : PW1 | |
| பெயர் : திரு.ரமேஷ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.சேவிஅம்பலம் | தொழில் : கூலி |
| கிராமம் : குமாரவாடி, முத்தமடைப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 47 /2025 |
| ( எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச 317–ன் படி மனுதாக்கல்,வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். 1ம் எதிரி நாகராஜன் எனது அண்ணன். 2ம் எதிரி தனலெட்சுமி எனது அண்ணன் மனைவி. 3ம் எதிரி திருப்பதி வெங்கடாசலம் உள்ளூர்க்காரர்தான். எதிரிகள் மூவரையும் தெரியும். நான் கேரளாவில் வேலை செய்கிறேன். கடந்த 2020 ம் ஆண்டு விவசாயம் செய்வதற்காக ஊருக்கு வந்தேன். எங்கள் ஊரில் எனது அப்பா சேவிஅம்பலம் பெயரில் 3 ஏக்கர் 61 சென்ட் பட்டா எண்.453 ல் நிலம் உள்ளது. எனது அப்பா 2013 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அப்பா இறப்பிற்கு பின்பு எனது அப்பா பெயரில் உள்ள நிலம் எனக்கும், எனது அண்ணனுக்கும் பொதுவாக இருந்து வந்தது. 2020 ம் ஆண்டு நான் நிலத்திற்குள் செல்லும் போது 1 மற்றும் 2ம் எதிரிகளாகிய எனது அண்ணனும் அவரது மனைவியும் அந்த நிலத்திற்கு தங்களது பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னார்கள். அந்த நிலம் தங்களுக்கு சொந்தம் என்றும், நிலத்திற்குள் வரக்கூடாது என்றும் மீறி வந்தால் குடும்பத்தோடு கொழுத்திவிடுவோம் என்று மிரட்டினார்கள். எனது அப்பா எனது அண்ணன் பெயரில் எதுவும் எழுதிக்கொடுக்காத வேலையில் எப்படி பட்டா அவர்கள் பெயருக்கு வந்தது என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மணப்பாறை தாலுகா அலுவலகத்தில் மனு செய்து விபரங்கள் கேட்டேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பட்ட பதில் கடிதத்தில் எனது அப்பா பெயரில் உள்ள பட்டா எண். 453 ஐ நீக்கி எனது அண்ணன் நாகராஜன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது. அதில் ஆவண எண். 2490/2005 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஆவண எண் 2490/2005 என்பது எனது அப்பா எனது அண்ணன் பெயருக்கு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்தாக ஒரு பத்திரம் பதிவு செய்யப்பட்டு இருந்ததாக அதன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆவண எண். 2490/2005 என்ற பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் சான்றிட்ட நகலை மணப்பாறை சார்பு பதிவாளர் அலுவலகத்தில் மனு

செய்து பெற்றேன். அந்த ஆவணமானது தேக்கமாள் என்பவர் தனது மகன் முனியான்டி என்பவருக்கு தானசெட்டில்மென்டாக 06.09.2005 பதிவு செய்யப்பட்டுள்ளதாக நகல் பெற்றேன். நாகராஜன் மேற்சொன்ன இடத்தை பொறுத்து தனது பெயருக்கு பட்டா எண்.2910 என்று மாற்றிய பிறகு தனது மனைவி தனலெட்சுமி பெயருக்கு 01.02.2021 அன்று தானசெட்டில்மண்ட் ஆவண எண்.627/2021 எழுதிகொடுத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. என்னையும், அரசையும், வருவாய் துறையையும் ஏமாற்றி எனது அண்ணன் நாகராஜன், அவரது மனைவி தனலெட்சுமி நிலத்தை மோசடி செய்து அபகரித்துவிட்டார்கள். அதனால் திருச்சி SP அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தேன். அதில் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. பின்னர் நிலஅபகரிப்பு நீதிமன்றத்தில் மனு செய்தேன். அந்த மனுவின் பெயரில் 06.11.2021 அன்று வழக்கு பதிவு செய்தார்கள். நாகராஜன், தனலெட்சுமி ஆகியோர்களின் தூண்டுதலின் பெயரில் போலியான ஆவணம் தயார் செய்து ஆவண எண்.2490/2005 என்ற ஆவணமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தது போல் போலியாக தயாரித்துள்ளார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் மனுவானது நான் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் நிலஅபகரிப்பு தடுப்பிரிவு சிறப்பு நீதிமன்றம், திருச்சியில் தாக்கல் செய்த புகார் மனுவாகும். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகார் மனுவுடன் நான் 1 முதல் 10 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் முறையே கடந்த 09.02.2021 அன்று உயர்திரு.ஆய்வாளர் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக வளாகம், திருச்சி என்பவருக்கு அனுப்பட்ட கடிதத்தின் நகல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், திருச்சி அவர்களுக்கு அனுப்பட்ட கடிதத்தின் நகல் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன இருவருக்கும் தபால் மூலம் அனுப்பட்ட அஞ்சலக ரசீது நகல் எண்ணம் –2 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனை அதிகாரிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமை இடத்து துணை வட்டாச்சியர் மணப்பாறை அவர்களிடமிருந்து பெறப்பட்ட அசல் மேலெழுத்து கடிதத்துடன் கூடிய ஆவண நகல்கள்( மொத்தம் –10 பக்கங்கள்) அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. எதிரிகள் மூவரும் சேர்ந்து போலியான பத்திரம் தயார் செய்து என்னை ஏமாற்றி எனது நிலத்திற்குள் நுழையவிடாமல் தடுத்துள்ளார்கள். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**3. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2025 | |
| CC.No.136 /2023 | |
| சாட்சி : PW2 | |
| பெயர் : திரு.மலையாண்டி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.ஆண்டி | தொழில் : விவசாயம் |
| கிராமம் : முத்தமடைப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 55 /2025 |
| ( எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச 317-ன் படி மனுதாக்கல்,வழக்கறிஞர் ஆஜர் ) | |

-----------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 06.11.2021 அன்று காலை சுமார் 06.00 மணியளவில் ஆடுகளுக்கு தலை வெட்டுவதற்காக செம்மலைக்கு சென்றோம். ரமேஷ்க்கும், நாகராஜீக்கும் சொந்தமான இடத்தில் கூட்டமாக இருந்தது. என்னவென்று நாங்கள் பார்க்க சென்றபோது போலீசார் சம்பவ இடத்தை வரைபடம் வரைந்து சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும், எனது மனைவி பழனியம்மாளும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.